Sri V. K. Kothandaraman : வேலூர் ஆஸ்பத்திரியில் நவம்பர் மாதத்தில் பழுது அடைந்த எக்ஸ்ரே கருவி பழுது பார்க்கப்படாமல், தாமதமானதால், நோயாளிகள் எக்ஸ்ரே எடுத்துக்கொள்ள முடியாமல் பாதிக்கப்பட்டார்கள் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ? அம்மாதிரி நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு நிபுணர்களை அதிகப்படுத்த முடியுமா ?

The Hon. Sri M. A. Manickavelu : அந்தக் கருவி ரொம்ப நாள் வேலை செய்து விட்டால், பழுது பார்க்க முடியாது. இது எந்த நிலையில் கெட்டுப் போச்சு என்று தெரியாது. பழுது பார்க்க முடியாது என்ற அளவுக்கு அது ரொம்ப நாள் வேலை செய்திருந்தால், வேறுதான் வாங்க வேண்டும்.

Official Language

* 920 *Q.*—**Sri A. Vedarathnam** : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) ஆட்சி மொழியைத் துரிதமாக அமுலாக்க நியமனம் செய்திருக்கும் கமிட்டி என்ன திட்டத்தின் பேரில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது ?

(இ) எந்தெந்த இலாக்காக்களில் எத்தனை ஆண்டுகளில் முற்றிலும் ஆட்சி மொழியை அமுலுக்குக் கொண்டுவரப்படும் ?

The Hon. Sri C. Subramaniam : (*a*) The hon. Member is presumably referring to the recent reconstitution of the Official Language Committee. An important stage has now been reached in the implementation of the Madras Official Language Act, 1956, and effective action to be taken in the next two years will be decisive for ensuring the success of the change-over from English to Tamil in all branches of State Administration. In this view the Committee has been re-constituted by the Government with a full time Chairman with the status of a Member of the Board of Revenue.

(*b*) So far, Tamil has been introduced for official correspondence in Government Offices in this State up to the district level, numbering 2,473 in all. The scheme is expected to be introduced in the remaining 1,003 (one thousand and three) offices up to the district level in the course of 1961. The Chairman, Official Language Committee, is in correspondence with the concerned Heads of Departments in regard to this and will recommend to the Government, as soon as possible the dates from which Tamil can be introduced for Official correspondence in those various offices. After 1961 there will thus remain only

(1) the Courts; and

(2) the Offices of the Heads of Departments numbering 45 in all.

The latter offices will be covered as early as possible, but it is not practicable to prescribe the time table for them now. The question of introducing Tamil for proceedings even in Courts subordinate to the High Court cannot be considered until the Standard Glossary which is now under preparation giving Tamil equivalents for all legal terms has been finalised, and all Acts have been translated into Tamil in accordance with that Glossary.

18th March 1961]

SRI A. VEDARATHNAM : இந்த மாற்றி அமைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் யார், யார்? அவாகள் இதுவரை கூடி என்ன முடிவு செய்திருக்கிறார்கள்? முடிவுகளின் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தக் குழு இப்பொழுது தான் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் :

ஜஸ்டிஸ் எம் அனந்தநாராயணன் ;

ஸ்ரீ என். டி. சுந்தரவடிவேலு, டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்

ஸ்ரீ குழந்தைவேலு, டைரக்டர் ஆப் இன்பர்மேஷன் அண்டு பப்ளிசிடி;

ஸ்ரீசங்கரவடிவேலு அண்ட் ஸ்ரீ பெரியசாமி தூரன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Even after the implementation of the suggestion, may I know from the Hon. Minister whether English will continue side by side?

THE HON. SRI C. SUBRAMANIAM : Not at the district level. But we have made interim arrangements with reference to officers who are not conversant with Tamil language. For them we have passed orders that during the interim period they could correspond in English.

SRI A. VEDARATHNAM : கோர்ட் தவிர மற்ற இலாகாக்களில் தமிழிலேயே நடவடிக்கைகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது ; இந்த அசெம்பிளியில் முற்றிலும் தமிழிலேயே நடவடிக்கைள் நடத்த முயற்சிகள் ஏதாவது உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கான முயற்சிகளும் செய்யப்படுகின்றன ; அதைப்பற்றி பட்ஜெட் விவாதத்தின் போதும் சொன்னேன். முக்கியமான கேள்விகளுக்கு முதலிலேயே கொடுக்கும் பதிலையும் தமிழிலேயே கொடுக்க எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அப்படிக் கொண்டுவர முயற்சிக்கப்படும்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revisi on by the Member.**]

II.—BUDGET FOR THE YEAR 1961-62.

VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961-62.

(1) DEMAND I—LAND REVENUE DEPARTMENT.

THE HON. SRI M. A. MANICKAVELU : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,01,50,200, under Demand I—Land Revenue Department."

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,01,50,200 under Demand I—Land Revenue Department."

சனம் அண்ணாமலையின் 253-வது வெட்டுப் பிரேரணையை பிரேரிப்பார் என்று அறிகிறேன். அதைப் பிரேரேபிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்,.

SRI S. M. ANNAMALAI : Sir. I move the following cut motion :—

"That the allotment of Rs. 1,01,50,200 under Demand I—Land Revenue Department be reduced by Rs. 100."